# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ),**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 180 /பேரூ/2024**
**நாள் : 18.03.2025**

திருமதி. S. விமலா, துணைத் தலைவர்
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

(1) செயல் அலுவலர்,
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
(2) திரு. P. கணேசன், 3வது வார்டு உறுப்பினர்
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி
(3) திரு. S. கிறிஸ்டோபர் சந்திரமோகன், 4வது வார்டு உறுப்பினர்
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி
(4) திருமதி P. நாகம்மாள், 8வது வார்டு உறுப்பினர்
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி
(5) திருமதி M. வனிதா 11வது வார்டு உறுப்பினர், – எதிர் மனுதாரர்கள்
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி
(6) திருமதி A. வசந்தகுமாரி 12வது வார்டு உறுப்பினர்,
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி
(7) திருமதி M. இந்திரா 13வது வார்டு உறுப்பினர்,
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி
(8) திருமதி. P. அனிதா 14 வது வார்டு உறுப்பினர்,
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி
(9) திரு. இரா. சசிகுமார்,
இளநிலை உதவியாளர், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி ,
கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரம், 11/86-4, கிட்டங்கி பின்புறம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி S. விமலா என்பவரின் 28.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.10.2024 அன்று பெறப்பட்டு, 180/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரம், 11/86-4, கிட்டங்கி பின்புறம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி S. விமலா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சியில் 27.08.2024 அன்று சாதாரண மன்ற கூட்டம் தலைவர் தலைமையில், செயல் அலுவலர் முன்னிலையில் நடைபெற்றது. அதில் 29 தீர்மான பொருள்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, தீர்மானங்களை உறுப்பினர்கள் முன்னிலையில் தலைவரால் பதிவேட்டில் எழுதப்பட்டது. அதன் பிறகு (1) திரு. P. கணேசன் 3வது வார்டு உறுப்பினர், (2) திரு. S. கிறிஸ்டோபர் சந்திரமோகன் 4வது வார்டு உறுப்பினர், (3) திருமதி P. நாகம்மாள் 8வது வார்டு உறுப்பினர், (4) திருமதி M. வனிதா 11வது வார்டு உறுப்பினர், (5) திருமதி A. வசந்தகுமாரி 12வது வார்டு உறுப்பினர், (6) திருமதி M. இந்திரா 13வது வார்டு உறுப்பினர் மற்றும் (7) P. அனிதா 14 வது வார்டு உறுப்பினர் ஆகிய மன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக தலைவர் மற்றும் செயல் அலுவலருக்கு 29 தீர்மானங்களை தீர்மான பதிவேட்டில் நாங்கள் எழுதித் தரும் குறிப்புதான் தீர்மான பதிவேட்டில் எழுதப்பட வேண்டுமென மிரட்டப்பட்டது. பின்பு பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் (அ1) உதவியுடன் தீர்மானப் பதிவேட்டினை அலுவலகத்திலிருந்து எடுத்து அதனை திருத்தம் செய்து அவர்கள் எழுதி கொடுத்த தீர்மானம் குறிப்புகளை தீர்மான பதிவேட்டில் எழுதியுள்ளனர். அதனை அறிந்து நாங்கள் தீர்மானப் பதிவேட்டின் நகல் கேட்டதற்கு இளநிலை உதவியாளர் தர மறுத்துவிட்டார். பின்பு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுத்துப்பூர்வமாக எழுதி கேட்டதற்கு ஒவ்வொரு பொருளும் தனித்தனியே கணினி மூலம் தயார் செய்து மட்டுமே தரப்பட்டது. அதில் மூன்று பொருள்களுக்கு மட்டுமே மேலோப்பமிட்டு தந்துள்ளனர்.

தீர்மானங்கள் பதிவேட்டில் எழுதிய பின்னர் அதனை அடித்தல்/திருத்தல் செய்ய எந்தவொரு அனுமதியும் பெறாமல் இளநிலை உதவியாளர் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கொட்டாரம் பேரூராட்சியின் மன்ற கூட்டத்தின் நம்பிக்கை தன்மையையும், அலுவலக நம்பிக்கையின்மையும் மன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஒப்பந்தகாரர்களுக்காகவே (கையூட்டு பெறுவதற்காக) தீர்மான பதிவேடு திருத்தம் என செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் அறியப்படுகிறது. (உதாரணமாக) அம்ருத் 2.0 திட்டம் நடைமுறையிலுள்ளது எனக் கூறி 22.02.2024 (தீர்மான பொருள் எண்.19), 04.01.2024 (தீர்மான பொருள் எண்.2) அன்று நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் 10வது மற்றும் 15வது வார்டு உறுப்பினர்களின் தீர்மானங்களை ரத்து செய்தனர். ஆனால் தற்போது கையூட்டு பெறுவதற்காக 27.08.2024 அன்று நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் (திருத்தம் செய்யப்பட்ட தீர்மானம் பதிவேட்டின்படி) பொருள் எண். ஒன்றை ஒத்தி வைத்துள்ளனர்.

ஆகவே சமூகம் முறையான விசாரணை மேற்கொண்டு முறைகேட்டில் ஈடுபட்ட பேரூராட்சி இளநிலை உதவியாளர் (அ1) மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் (இனிமேல் இவ்வாறான முறைகேடுகளில் ஈடுபடாதவண்ணம்) கொட்டாரம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளர் பணியில் மீண்டும் இவரே தொடர்ந்தால் இவரிடம் நாங்கள் எவ்வாறு உண்மைதன்மையை எதிர்பார்க்க முடியும் என்பதை கருத்தில் கொண்டு நிரந்தர பணிநீக்கம் செய்யவும், மன்ற தீர்மான பதிவேடுகளை முறைகேடாக திருத்தம் செய்த மன்ற உறுப்பினர்கள் மீது தமிழ்நாடு உள்ளாட்சி சட்டங்கள்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில் 27.08.2024 அன்று முற்பகல் 11.00 மணிக்கு பேரூராட்சி மன்ற கூட்டம் நடைபெற்றுள்ளது. மேற்படி கூட்டத்தில் தலைவர் மற்றும் 13 வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டு 27 பொருட்கள் குறித்து விவாதம் செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி கூட்டத்தின் போது தீர்மான புத்தகம் திருத்தம் செய்தது தொடர்பாக தீர்மான புத்தகம் பார்வையிடப்பட்டதில் பொருள் எண்.2 தீர்மானம் எண்.324 பொருள் எண்.23 தீர்மானம் எண்.346 ஆகிய தீர்மானங்கள் பேரூராட்சி மன்ற தலைவரால் திருத்தம் செய்து எழுதப்பட்டது தெரிய வருகிறது. மேற்படி தீர்மான புத்தகம் இளநிலை உதவியாளர் மற்றும் மன்ற உறுப்பினர்களால் திருத்தம் செய்து எழுதப்படவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் திருமதி. S. விமலா, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் எதிர்மனுதாரர்களான கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி 7வது வார்டு மன்ற உறுப்பினர்கள் மற்றும் கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோருக்கு 19.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.12.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. நிர்வாக காரணங்களால் 19.12.2024 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் மன்றத்தில் விசாரணை நடைபெறவில்லை.

5) எனவே, மனுதாரர் திருமதி. S. விமலா, துணைத் தலைவர், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் எதிர்மனுதாரர்களான கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி 7வது வார்டு மன்ற உறுப்பினர்கள் மற்றும் கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோருக்கு 10.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) மனுதாரர் திருமதி S. விமலா, துணைத் தலைவர், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் என்பவர் 10.02.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சியில் 27.08.2024 அன்று நடைபெற்ற கொட்டாரம் முதல் நிலை பேரூராட்சி சாதாரண மன்ற கூட்டத்தில் 29 தீர்மனங்கள் நிறைவேற்றப்பட்டு தீர்மான பதிவேட்டில் எழுதப்பட்டது.

- ஆனால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 7 மன்ற உறுப்பினர்கள் தாங்கள் அளிக்கும் குறிப்புகளின் அடிப்படையில் தீர்மான பதிவேட்டில் பதியப்பட வேண்டும் என தெரிவித்து குறிப்பு ஒன்றினை கூட்டாக மன்ற தலைவருக்கு சமர்பிக்கப்பட்டது. அதன் நகலினை எனது புகார் மனுவில் சமர்ப்பித்துள்ளேன். இதனை பேரூராட்சி இளநிலை உதவியாளர் (அ1) உதவியுடன் தீர்மானப் பதிவேட்டில் பேரூராட்சி மன்றத் தலைவரால் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தீர்மானத்தில் திருத்தம் கோரி குறிப்பு அளித்த உறுப்பினர்களின் விவரம் :–

(1) திரு. P. கணேசன்
(3வது வார்டு உறுப்பினர்)
(2) திரு. S. கிறிஸ்டோபர் சந்திரமோகன்
(4வது வார்டு உறுப்பினர்)
(3) திருமதி P. நாகம்மாள்
(8வது வார்டு உறுப்பினர்)
(4) திருமதி M. வனிதா
(11வது வார்டு உறுப்பினர்)
(5) திருமதி A. வசந்தகுமாரி
(12வது வார்டு உறுப்பினர்)
(6) திருமதி M. இந்திரா
(13வது வார்டு உறுப்பினர்)
(7) P. அனிதா
(14வது வார்டு உறுப்பினர்)

- பேரூராட்சி மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 29 தீர்மானங்களில், கீழ்க்காணும் மூன்று தீர்மானங்களில் திருத்தம் செய்துள்ளனர்.

பொருள்:1 அம்ரூத் 2.0 குடிநீர் திட்டப்பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
**ஆனால், மேற்காணும் தீர்மானத்தினை ஒத்தி வைக்கலாம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| பொருள்:20 | ஆறுமுகபுரம் ஆதிதிராவிடர் சமுதாய மக்களுக்கு சொந்தமான சுடுகாடு அமைந்துள்ள இடத்தில் மழை காலங்களில் தண்ணீர் தேங்குவதால் மணல் நிரப்பி சிறு பாலம் (Culvert) அமைத்தல் பணி மேற்கொள்ள அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.<br>**ஆனால் இத்தீர்மானத்தில், பொதுப்பணித் துறையிடம் அனுமதி பெற்று பணி செய்ய அனுமதிக்கலாம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.** |
| பொருள்:23 | பொது சுகாதார பொருட்கள் விநியோகம் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒரே நபரிடமிருந்து பெறப்பட்டதால், அதனை ஏற்க கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.<br>**ஆனால், நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மானத்திற்கு எதிராக மேற்காணும் ஒரே நபரிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.** |

எனவே முறைகேடாக தீர்மானப் பதிவேட்டினை திருத்தம் செய்துள்ள பேரூராட்சி இளநிலை உதவியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட மன்ற உறுப்பினர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரரான கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. ஜெ. சகாய முத்தரசி என்பவர் 10.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

நான் பதவி உயர்வு மூலமாக கொட்டாரம் முதல் நிலை பேரூராட்சியில் கடந்த 02.09.2024 அன்று முதல் செயல் அலுவலராகப் பணிபுரிந்து வருகிறேன். தீர்மான புத்தகத்தின் வாயிலாக பின்வரும் விவரங்கள் தெரிய வருகிறது.

- கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி அலுவலக மன்றத்தில் 27.08.2024 அன்று நடைபெற்ற மன்ற சாதாரண கூட்டத்தில் மன்றத் தலைவர் தலைமையில் 13 வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டு 29 பொருட்கள் மீது விவாதம் மேற்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- மனுதாரர் புகாராக தெரிவிக்கும், மன்றத்தில் வைக்கப்பட்ட பொருள் எண்.1இல் அம்ரூத் 2.0 குடிநீர் திட்டப்பணிகளை மேற்கொள்ள மன்றத்தால் **தீர்மானிக்கப்பட்டது** என்பதனை **ஒத்திவைக்கப்பட்டது என திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**
- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பொருள் எண். 20ல் ஆறுமுகபுரம் ஆதிதிராவிடர் சமுதாய மக்களுக்கு சொந்தமான சுடுகாடு அமைந்துள்ள இடத்தில் மழை காலங்களில் தண்ணீர் தேங்குவதால் மணல் நிரப்பி சிறு பாலம் (Culvert) அமைத்தல் பணி மேற்கொள்ள **பொதுப்பணித் துறையின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது என்ற தீர்மானத்தில் திருத்தம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.**
- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பொருள் எண். 23ல் பொது சுகாதார பொருட்கள் விநியோகம் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி ஒரே நபரிடமிருந்து பெறப்பட்டதால், அதனை

ரத்து செய்யப்பட்டது என்பதனை திருத்தம் செய்து அங்கீகரிக்கப்பட்டது என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- 2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகளில் விதி 164–இன்படி "*மன்ற கூட்டத்தின் நாளன்று மன்றமானது இத்தீர்மானத்தில் நிலவும் அனைத்து தொடர்புடைய காரணிகளையும் கருத்தில் கொண்டு தீர்மானத்தை ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம்* என வரையறுக்கப்பட்டுள்ள நிலையில், மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மன்றத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் பேரூராட்சி மன்ற தலைவரால் திருத்தம் செய்யலாம் என இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

8) எதிர்மனுதாரரான கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம், முதல்நிலை பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் இரா. சசிகுமார் என்பவர் 10.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் வாக்குமூலம் சமர்ப்பித்துள்ளார்.

- கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி அலுவலக மன்றத்தில் 27.08.2024 அன்று நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட 29 பொருட்கள் (Agenda) என்னால் படிக்கப்பட்டது.
- ஆனால், ஆகஸ்ட் 2024–ஆண்டில் நடைபெற்ற மன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.
- அதன் பின்பு நான் எனது அலுவலகப் பணி மேற்கொள்ள கீழ் தளத்திற்கு சென்றுவிட்டேன் என்பதனை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

9) எதிர்மனுதாரர்களான திரு. P. கணேசன் திரு. S. கிறிஸ்டோபர் சந்திரமோகன் திருமதி. P. நாகம்மாள் , திருமதி. M. வனிதா, திருமதி A. வசந்தகுமாரி, திருமதி M. இந்திரா மற்றும் திருமதி. P. அனிதா ஆகிய 7 நபர்களும் தங்களது வயது, குடும்ப சூழ்நிலை காரணமாக 10.02.2025 அன்றைய விசாரணைக்கு தங்களால் வர இயலாது எனவும் தங்களது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கோரியுள்ளனர். அவ்வாக்குமூலத்தில் அனைவரும் கையெழுத்திட்ட ஒரே வாக்குமூலமாக கீழ்க்காணுமாறு தெரிவித்துள்ளனர்.

கொட்டாரம் பேரூராட்சியில் 27.08.2024 அன்று நடைப்பெற்ற மன்ற சாதாரண கூட்டத்திற்கு தலைவர், துணைத் தலைவர் உட்பட மொத்தம் 14 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டம் தலைவர் திருமதி. S. செல்வகனி அவர்கள் தலைமையில் செயல் அலுவலர் திருமதி. அ. லோபா முத்திரை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மொத்தம் 29 பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. விவாதத்தின்போது ஒரு குறிப்பிட்ட பொருள்களை ஒத்தி வைக்கவும் மற்ற பொருள்களை அனுமதிக்கவும் தலைவர் உட்பட பெரும்பான்மை வார்டு உறுப்பினர்கள் கூறினோம். மேலும் சில பொருள்களை தவிர்த்து எந்த பொருள்களும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. தலைவர் திருமதி. S. செல்வகனி அவர்கள் வயது

முதிர்வின் காரணமாக விரைவாகவும், தெளிவாகவும் தீர்மான பதிவேட்டில் தீர்மானங்கள் பதிவு செய்ய இயலாமல் காலதாமதம் ஆனதால் பெரும்பான்மை வார்டு உறுப்பினர்களாகிய நாங்கள் எழுத்துப்பூர்வமாக 29 பொருள்களுக்கும் எங்களது கருத்துக்களை தீர்மானமாக தீர்மான பதிவேட்டில் பதிவு செய்ய தலைவர் அவர்களிடம் மனு வழங்கினோம். பின்னர் கூட்டம் முடிந்து அனைத்து வார்டு உறுப்பினர்களும் வெளியே வந்துவிட்டோம் என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொட்டாரம் பேரூராட்சியில் நடைபெறும் மன்ற கூட்டங்களில் தலைவர் உட்பட பெரும்பான்மை வார்டு உறுப்பினர்கள் ஒரு அணியாகவும், துணைத் தலைவர் திருமதி. S. விமலா அவர்கள் தன்னிச்சையாகவும் செயல்பட்டு வருகின்றனர். ஆகவே ஒருமனதாக தீர்மானங்களை நிறைவேற்றுவது மிகவும் அரிதாகும். மேலும் தீர்மான பதிவேட்டில் தீர்மானங்களை நாளது தேதி வரை மன்ற தலைவர் திருமதி. S. செல்வகனி அவர்களால் அவரது கைப்பட மட்டுமே எழுதப்பட்டு வரப்படுகிறது. தலைவர் அவர்களால் எழுதப்பட்ட தீர்மான பதிவேடு செயல் அலுவலர் அவர்கள் அறையில் உள்ள அலமாரியில் வைத்து பாதுகாக்கப்பட்டு, செயல் அலுவலர் அவர்களது பாதுகாப்பில் இருந்து வருகிறது. இந்நிலையில் செயல் அலுவலர் திருமதி. அ. லோபா முத்திரை அவர்கள் அனுமதி பெறாமல், அவர்களுக்கு தெரியாமல் தீர்மான பதிவேட்டை எடுத்து வார்டு உறுப்பினர்களாகிய நாங்கள் திருத்தம் செய்து எழுதினோம் என்பது உண்மைக்கு புறம்பான பொய்யான குற்றச்சாட்டாகும். மேலும் வார்டு உறுப்பினர்களாகிய நாங்கள் பேரூராட்சி தலைவர் திருமதி. S. செல்வகனி மற்றும் செயல் அலுவலர் திருமதி. லோபா முத்திரை ஆகியோரை மிரட்டி தீர்மானங்களை திருத்தம் செய்து தீர்மான பதிவேட்டில் எழுத சொன்னார்கள் என துணைத் தலைவர் திருமதி. S. விமலா கூறுவது பொய்யான தகவல் ஆகும். தலைவர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் இது சம்பந்தமாக எந்த புகாரும், எந்த கருத்தும் எவரிடமும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தீர்மான பதிவேட்டின் தீர்மான நகலை இளநிலை உதவியாளர் (அ1) தர மறுத்துவிட்டார் என பொய்யான குற்றச்சாட்டினை கூறியுள்ளார். ஏனெனில் தீர்மான பதிவேட்டில் உள்ள தீர்மான நகலை செயல் அலுவலர் அவர்களிடம் தான் மனு கொடுத்து பெறவேண்டுமே தவிர இளநிலை உதவியாளருக்கு தீர்மான நகல் வழங்க வழிவகை இல்லை.

கொட்டாரம் பேரூராட்சி துணைத் தலைவர் திருமதி. S. விமலா அவர்கள் தான் பதவியேற்ற நாளது முதல் ஆணவத்துடன், யாரையும் மதிக்காமல் பேரூராட்சி வளர்ச்சி பணிகளை தடுத்து வந்ததால் பேரூராட்சி தலைவர் உட்பட 11 வார்டு உறுப்பினர்கள் கூட்டாக சேர்ந்து மேற்படி துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மான கொண்டு வந்தோம். பின்னர் அனைத்து வார்டு உறுப்பினர்களிடம் மன்னிப்பு வேண்டியதால் நம்பிக்கையில்லா தீர்மானத்தை ரத்து செய்தோம். இதனை மனதில் வைத்துக்கொண்டு பழிவாங்கும் நடவடிக்கையாக பொய்யான, உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார். கொட்டாரம் பேரூராட்சி தலைவர் திருமதி. S. செல்வகனி அவர்கள் நாளது தேதி வரை தீர்மான பதிவேட்டில் தீர்மானங்கள் தன் கைப்பட எழுதி வருவதாகவும், வார்டு உறுப்பினர்கள் என்னை மிரட்டவோ, தீர்மான பதிவேட்டில் திருத்தம் செய்யவோ இல்லை என கடிதம் தந்துள்ளார். வார்டு உறுப்பினர் M. செல்வன் உண்மைக்கு புறம்பான, பொய்யான தகவல்களை கூறி

கையொப்பம் வாங்கியதாகவும், வார்டு உறுப்பினர் P. சரோஜா போலியாக எனது கையொப்பம் போட்டுள்ளதாகவும் கூறி கடிதம் தந்துள்ளார். மேலும் வார்டு உறுப்பினர்களான நாங்கள் தீர்மான பதிவேட்டில் எங்களது கைப்பட எழுதி திருத்தம் செய்ததாகவோ, பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி. S. செல்வகனி மற்றும் செயல் அலுவலர் திருமதி. அ. லோபா முத்திரை ஆகியோரை மிரட்டியதாகவோ எதிர்மனுதாரர் திருமதி. S. விமலா அவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்தால் தாங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு கட்டுப்படுவோம் என இதன்மூலம் உறுதி கூறுகின்றோம்.

ஆகவே தாங்கள் ஏழையாகிய நாங்கள் குடும்ப சூழ்நிலை, உடல்நிலை, வயது முதிர்வின் காரணமாக தங்கள் அலுவலகம் நேரில் வர இயலாமைக்கு மன்னித்து மேற்கூறிய விளக்கங்களை ஏற்றுக்கொண்டு பொய்யான குற்றச்சாட்டு மற்றும் தகவல் அளித்த துணைத் தலைவர் திருமதி. S. விமலா மீது தக்க நடவடிக்கை எடுக்க பணிவுடன் வேண்டுகிறோம் என தெரிவித்துள்ளனர்.

10) மனுதாரர் திருமதி. S. விமலா என்பவரின் புகார் மனு, எதிர்மனுதாரரான கொட்டராம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை அவரது வாக்குமூலம், பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் மற்றும் 7 எதிர்மனுதாரர்களின் எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் ஆகியவை உரிய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி. S. விமலா என்பவர் தனது 28.09.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சியில் 27.08.2024 அன்று நடைபெற்ற கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி மன்ற சாதாரண கூட்டத்தில் 29 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தீர்மான பதிவேட்டில் எழுதப்பட்ட நிலையில், எதிர்மனுதாரர்களான திரு. P. கணேசன், திரு. S. கிறிஸ்டோபர் சந்திரமோகன், திருமதி P. நாகம்மாள், திருமதி M. வனிதா, திருமதி A. வசந்தகுமாரி, திருமதி M. இந்திரா மற்றும் திருமதி P. அனிதா ஆகிய 7 பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தாங்கள் அளிக்கும் குறிப்புகளின் அடிப்படையில் தீர்மான பதிவேட்டில் பதியப்பட வேண்டுமென தெரிவித்து குறிப்பு ஒன்றினை பேரூராட்சி மன்ற தலைவருக்கு சமர்ப்பித்து பேரூராட்சி இளநிலை உதவியாளர் மூலம் திருத்தம் செய்துள்ளனர் என புகார் தெரிவித்துள்ளார். இவ்வாறு பேரூராட்சி மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 29 தீர்மானங்களில், கீழ்க்காணும் மூன்று தீர்மானங்களில் திருத்தம் செய்துள்ளனர் என தனது வாக்குமூலத்தில் புகார் தெரிவித்துள்ளார்.
-

பொருள்:1 அம்ரூத் 2.0 குடிநீர் திட்டப்பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**ஆனால், மேற்காணும் தீர்மானத்தினை ஒத்தி வைக்கலாம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| பொருள்:20 | ஆறுமுகபுரம் ஆதிதிராவிடர் சமுதாய மக்களுக்கு சொந்தமான சுடுகாடு அமைந்துள்ள இடத்தில் மழை காலங்களில் தண்ணீர் தேங்குவதால் மணல் நிரப்பி சிறு பாலம் (Culvert) அமைத்தல் பணி மேற்கொள்ள அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.<br>**ஆனால் இத்தீர்மானத்தில், பொதுப்பணித் துறையிடம் அனுமதி பெற்று பணி செய்ய அனுமதிக்கலாம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.** |
| பொருள்:23 | பொது சுகாதார பொருட்கள் விநியோகம் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒரே நபரிடமிருந்து பெறப்பட்டதால், அதனை ஏற்க கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. |

ஆனால், நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மானத்திற்கு எதிராக மேற்காணும் ஒரே நபரிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என வாக்குமூலம் வாயிலாக புகார் தெரிவித்துள்ளார்.

கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி மன்றத் தலைவி திருமதி. S. செல்வகனி என்பவர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு சமர்ப்பித்துள்ள **24.01.2025** நாளிட்ட கடிதத்தில் **27.08.2024** அன்று நடைபெற்ற சாதாரண மன்ற கூட்ட தீர்மானங்கள் அனைத்தும் தீர்மான பதிவேட்டில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தின்படி தன்னால் தனது கைப்பட தீர்மானப் பதிவேட்டில் தீர்மானமாக பதிவு செய்ததாகவும், தான் தவறாக எழுதியதை தானே திருத்தம் செய்து எழுதி கையொப்பமிட்டு உள்ளேன் எனவும் என்னை எந்த உறுப்பினரும் மிரட்டவில்லை எனவும், இந்நாள்வரை தீர்மான பதிவேட்டில் தானே தீர்மானங்கள் நிறைவேற்றி எழுதி வருவதாகவும், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்ததன் காரணமாக காழ்ப்புணர்ச்சியுடன் பேரூராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்றே உண்மைக்கு புறம்பாக புகார் அளித்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

**3** தீர்மானங்கள் திருத்தம் செய்யப்பட்டதாக மனுதாரர் தெரிவிக்கும் புகாருக்கு, கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள தனது வாக்குமூலத்தின் மூலமாகவும், தீர்மானங்கள் திருத்தம் செய்ததற்கான ஆதாரமாக தீர்மான புத்தகத்தின் நகலின் மூலம் கீழ்க்காணும் விபரம் தெரிய வருகிறது.

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும், மன்றத்தில் வைக்கப்பட்ட பொருள் எண். 1இல் அம்ருத் 2.0 குடிநீர் திட்டப்பணிகளை மேற்கொள்ள மன்றத்தால் **தீர்மானிக்கப்பட்டது** என்பதனை **ஒத்திவைக்கப்பட்டது என திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**
- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பொருள் எண். 20ல் ஆறுமுகபுரம் ஆதிதிராவிடர் சமுதாய மக்களுக்கு சொந்தமான சுடுகாடு அமைந்துள்ள இடத்தில் மழை காலங்களில் தண்ணீர் தேங்குவதால் மணல் நிரப்பி சிறு பாலம் (Culvert) அமைத்தல் பணி மேற்கொள்ள **பொதுப்பணித் துறையின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது என்ற தீர்மானத்தில் திருத்தம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.**
- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பொருள் எண். **23**ல் பொது சுகாதார பொருட்கள் விநியோகம் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி ஒரே நபரிடமிருந்து பெறப்பட்டதால், அதனை

ரத்து செய்யப்பட்டது என்பதனை திருத்தம் செய்து அங்கீகரிக்கப்பட்டது என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

➢

2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகளில் விதி 164–இன்படி "*மன்ற கூட்டத்தின் நாளன்று மன்றமானது இத்தீர்மானத்தில் நிலவும் அனைத்து தொடர்புடைய காரணிகளையும் கருத்தில் கொண்டு தீர்மானத்தை ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம்* என வரையறுக்கப்பட்டுள்ள நிலையில், மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மன்றத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் பேரூராட்சி மன்ற தலைவரால் திருத்தம் செய்யலாம் என்று பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ள நிலையில் தீர்மான பதிவேடு சில வார்டு உறுப்பினர்கள் எழுதி தந்த குறிப்பின் அடிப்படையில், இளநிலை உதவியாளரின் உதவியோடு தலைவரை மிரட்டி தீர்மானங்கள் திருத்தப்பட்டதாக அளிக்கப்பட்ட புகார் நிரூபணமாகாத சூழ்நிலையிலும் கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தை ஏற்று, இப்புகார் மனு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறு ஆணையிடுகிறது.

இருப்பினும் இனிவருங்காலங்களில் இதுபோன்ற புகார்கள் எழாவண்ணம் இருக்கும் வகையில் பேரூராட்சி மன்ற கூட்ட நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் பேரூராட்சி மன்றக் கூட்டங்களில் உரிய அரசு வழிகாட்டுதல்களை பின்பற்றி CCTV காமிரா அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 18ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. S. விமலா, க/பெ. மரிய நேசன்,
   துணைத் தலைவர், 10வது வார்டு உறுப்பினர்,
   11/86-4, கிட்டங்கி பின்புறம், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
3. திரு. P. கணேசன், 3வது வார்டு உறுப்பினர்,
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
4. திரு. S. கிறிஸ்டோபர் சந்திரமோகன், 4வது வார்டு உறுப்பினர்
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
5. திருமதி P. நாகம்மாள், 8வது வார்டு உறுப்பினர்
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.

6. திருமதி M. வனிதா 11வது வார்டு உறுப்பினர்,
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
7. திருமதி. A. வசந்தகுமாரி, 12வது வார்டு உறுப்பினர்,
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
8. திருமதி . M. இந்திரா 13வது வார்டு உறுப்பினர்,
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
9. திருமதி. P. அனிதா, 14 வது வார்டு உறுப்பினர்,
   கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
10. திரு. இரா. சசிகுமார்,
    இளநிலை உதவியாளர், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி ,
    கன்னியாகுமரி மாவட்டம்
11. பேரூராட்சிகளின் இயக்குநர்,
    பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
    ராஜா அண்ணாமலைபுரம்,
    எம். ஆர்.சி நகர், சென்னை – 28
12. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
    (பெயரிடப்பட்ட உரையில்)
    பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
    ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
    சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்.